DEPOSITION OF WITNESS

(CHAPTER XXII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE , SENDAMANGALAM

C.C.No.240/2025

PW - 6

| | | |
|---|---|---|
| Name | : | தமிழ்குமரன் (Lw - 7) |
| Father / Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act of 1969(Central Act 44 of 1969 on the ------------day of ----------26

**(எதிரி ஆஜர்)**

முதல் விசாரணை **Date : 23.06.2026**

நான் தற்போது நாமக்கல் மாவட்டம், குமராபாளையம் காவல்நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 2024 முதல் 2026 ம் ஆண்டு வரை சேந்தமங்கலம் காவல்நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்தேன்.

கடந்த 18.06.2025ம் தேதி காலை 08.00 மணிக்கு சேந்தமங்கலம் காவல் நிலையத்தில் பொறுப்பு அலுவலில் இருந்தபோது வாதி சுகண்யா என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரின் பேரில் மனு ரசீது எண்.230/2025-ன் கீழான மனு ரசீதின் பேரில் நிலைய குற்ற எண்.143/2025 BNS சட்டப்பிரிவுகள் 329(2), 78(2), 132, 351(2) -ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து அசலை புகார் மனுவுடன் இணைத்து கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பியும் ஒரு நகலை உயர் அதிகாரிகளுக்கு அனுப்பினேன். ஒரு நகலை புலன் விசாரணைக்காக எடுத்துக்கொண்டேன். **(**முதல் தகவல் அறிக்கை அ**.**சா**.**ஆ**.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது**.)**

கடந்த 18.06.2025ம் தேதி காலை 09.30 மணிக்கு சம்பவ இடமான சேந்தமங்கலம் கனரா வங்கிக்கு சென்று சாட்சிகள் ஹேமா, இளமுருகன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம்

தயார் செய்தேன். **(**மாதிரி வரைபடம் அ**.**சா**.**ஆ**.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது**.)** பின்பு சாட்சிகள் சுகன்யா, சாந்தகுமார், மனோஜ்குமார், கௌதம், இளமுருகன், ஹேமா ஆகியோரை விசாரித்து தனி தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் அன்றைய தினமே 12.00 மணிக்கு இவ்வழக்கின் எதிரியை அவரது வீட்டின் முன்பு வைத்து காரணம் கூறி கைது செய்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பினேன்.

இறுதியாக எதிரி மீது BNS சட்டப்பிரிவுகள் 329(2), 78(2), 132, 351(2) -ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

வாதி புகார் கொடுக்க ஏற்பட்ட காலதாமதம் குறித்து புகாரிலோ, 161 வாக்குமூலத்திலோ குறிப்பிடவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கில் CSR வழங்கப்பட்டதற்கு பின்பு நான் அறிவிப்பு அனுப்பி யாரையும் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். வாதியின் பெற்றோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்துகொண்டிருந்தபோது போலிசார் சம்பவ இடத்திற்கு சென்று விசாரித்தார்களா என்றால் இல்லை. புகாரானது என் முன்னர் எழுதப்பட்டதா என்றால் இல்லை. வாதி ஏற்கனவே எழுதி கொண்டு வந்தார். புகாரில் உள்ள சங்கதிகள் புகார்தாரருக்கு தெரியுமா என உறுதிபடுத்திகொண்டேனா என்றால் உறுதி படுத்திகொண்டேன். புகாரில் எதிரி வாதியின் கையை பிடித்ததாகவோ, அல்லது தொட்டதாகவோ, குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

எனது விசாரணையில் சாட்சி இளமுருகன் சம்பவ இடமான வங்கிக்கு சொந்த வேலையாக வந்ததாக கூறினார் என்றாலும், அவர் அங்கு வேலை செய்யவில்லை என்றாலும் சரிதான். சம்பவத்தின்போது வங்கியில் வாடிக்கையாளர்கள் இருந்தது பற்றி சாட்சிகள் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். புகார்தாரர் மற்றும் சாட்சிகள் வங்கியில் வேலை செய்வதை உறுதி செய்யும் வகையில் அவர்களது அடையாள அட்டையையோ அல்லது வேறு ஏதேனும் ஆவணத்தையோ என்னிடம் சமர்பிக்கவில்லை என்றால் சரிதான்.

புகார்தாரர் அவரது புகாரிலோ, எனது விசாரணையிலோ அவரும், எதிரியும் காதலித்து வந்தது பற்றியும், தங்களுக்குள்ளான பழக்கம் பற்றியும் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். எதிரிக்கு எந்த எந்த வங்கிகளில் வங்கி கணக்கு இருந்தது குறித்து நான் விசாரித்து தெரிந்துகொள்ளவில்லை என்றால் சரிதான். எதிரி புகார்தாரர் பணிபுரியும் வங்கிக்கு எந்த எந்த தேதிகளில் வந்தார் என்பது குறித்து

புகாரிலோ, எனது விசாரணையிலோ குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. நான் சொன்னதுபோல சொன்ன தேதியில் சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றாலும், புகார்தாரர் ஆஜர் எதிரியுடன் ஏற்பட்ட கருத்துவேறுபாடு காரணமாக கொடுத்த பொய்யான புகாரின் பேரில் சரிவர புலன் விசாரணை செய்யாமல் எதிரியின் மீது இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை**:** இல்லை.

**Taken down before me in open court and read/interpreted to the witness and acknowledged by him/ her to be correct.**

**Sd/- Tr.S.Raja Kumaran B.E. L.L.B.,**
**Judicial Magistrate,**
**Sendamangalam**